**ஏப்ரல் – 27**

# தேசியச் செய்திகள்

## யூரியாவிற்கான மானியத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- சமீபத்தில் TFL நிறுவனத்தில் தயாரிக்கவிருக்கும் யூரியாவிற்கு மானியம் வழங்க பொருளாதார விவகாரங்கள் மீதான மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் வழங்கி உள்ளது.
- TFL என்றால் தால்செர் உரத் தொழிற்சாலை (Talcher Fertilizer Plant) என்பதாகும்.
- TFL என்பது அரசின் கீழ் இயங்கும் ஒரு உரத் தொழிற்சாலையாகும்.
- TFL நிறுவனம் ஒடிசாவில் ஒரு புதிய உரத்தொழிற்சாலையைத் தொடங்கவுள்ளது.
- இத்தொழிற்சாலையானது நிலக்கரி வளிமமாக்கல் (Coal Gasification) முறையின் மூலம் யூரியாவினை உற்பத்தி செய்யும்.
- இத்தொழிற்சாலையினை நிறுவ இந்திய அரசானது மானியம் வழங்குகிறது.
- இந்தியாவில் நிலக்கரி வளிமமாக்கல் முறையின் மூலம் மண்ணிற்குத் தேவையான நைட்ரஜன் நிறைந்த ஊட்டச்சத்தினை தயாரிக்கும் ஒரே தொழிற்சாலை இதுவாகும்.
- தால்செர் உரத் தொழிற்சாலையானது இந்திய உரங்கள் கூட்டுறவுக் கழகம், ராஷ்ட்ரிய கெமிக்கல்ஸ் மற்றும் பெர்டிலைசர்ஸ் நிறுவனம், GAIL மற்றும் Coal India நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்தும் ஒரு கூட்டு நிறுவனமாகும்.
- இத்தொழிற்சாலையை அமைப்பதற்கான ஒப்பந்தமானது சீனாவில் அமைந்துள்ள வுகான் பொறியியல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

The estimated project cost of the Talcher Fertilizers Limited (TFL) Urea project, first of its kind project in India, is ₹13,277.21 crore

The project will improve availability of fertilizer to farmers & save transport subsidy for supply of urea in eastern part of the country

Will assist in reducing Urea imports to the tune of 12.7 LMT per annum leading to savings in foreign exchange

## இந்தியாவின் கச்சா எண்ணெய் உற்பத்தியில் வீழ்ச்சி

- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சகமானது 2021-21 ஆம் ஆண்டிற்கான தரவுகளை சமீபத்தில் வெளியிட்டது.
- இந்தத் தரவுகளின் படி, இந்தியாவின் கச்சா எண்ணெய் உற்பத்தியானது 30.5 மில்லியன் டன்களாக குறைந்துள்ளது.
- 2019-20 ஆம் நிதி ஆண்டில் அதன் உற்பத்தி 32.17 மில்லியன் டன்களாக இருந்தது.

### *கச்சா எண்ணெய் உற்பத்தி*

- முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020-21 ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் கச்சா எண்ணெய் உற்பத்தியானது 5% குறைந்துள்ளது.
- எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனமானது 2019-20 ஆம் நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020-21 ஆம் நிதி ஆண்டில் 2% என்ற அளவிற்குக் குறைவான எண்ணெய்யை உற்பத்தி செய்துள்ளது.
- 2020-21 ஆம் நிதி ஆண்டில் ONGC நிறுவனம் உற்பத்தி செய்த எண்ணெய்யின் அளவு 20.2 மில்லியன் டன்களாகும்.
- ஆயில் இந்தியா லிமிடெட் நிறுவனமானது 5.4% அளவிற்கு குறைவான எண்ணெயையே உற்பத்தி செய்துள்ளது.

### *இயற்கை எரிவாயு உற்பத்தி*

- 2020-21 ஆம் நிதி ஆண்டில் இயற்கை எரிவாயுவின் உற்பத்தியானது 28.67 பில்லியன் கன மீட்டர்களாக இருந்தது.
- இது 2019-20 ஆம் ஆண்டு உற்பத்தியை விட 8% குறைவாகும்.
- இருப்பினும், 2021 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் தனது கிருஷ்ணா-கோதாவரி வடிகால் பகுதிகளைச் சார்ந்த எண்ணெய் உற்பத்தி மையங்களில் (KG basinfield) உற்பத்தியைத் தொடங்கியதால் இந்தியாவின் ஒட்டு மொத்த இயற்கை எரிவாயு உற்பத்தியானது உயரத் தொடங்கியது.
- கிருஷ்ணா-கோதாவரி வடிகால் பகுதிகளில் ரிலையன்ஸ் தனது இயற்கை எரிவாயு உற்பத்தியினை 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கியது.
- இப்பகுதியில் தற்போது ஒரு நாளைக்கு 1.3 மில்லியன் கனமீட்டர் அளவுக்கு இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யப்படுகிறது.

## WEF நிறுவனத்தின் உலகளாவிய ஆற்றல் மாற்றக் குறியீடு

- இக்குறியீடானது ஒரு நிலையான, ஆற்றல்மிகு, எளிதில் அணுகக் கூடிய மற்றும் உள்ளார்ந்த ஆற்றல் முறைக்கு மாறுவதற்கு எந்த அளவிற்குத் தயார் நிலையில் உள்ளன என்று 115 நாடுகளிடையே ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்கிறது.
- இக்குறியீடு மூன்று பரிமாணங்களின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.
- அவை பொருளாதார மேம்பாடு மற்றும் வளர்ச்சி, நிலைப்புத் தன்மை, ஆற்றல் மற்றும் உற்பத்தி மற்றும் ஆற்றலை அணுகுவதற்கான குறிகாட்டிகள் ஆகியனவாகும்.
- 2021 ஆம் ஆண்டின் உலகளாவிய ஆற்றல் மாற்றக் குறியீட்டில் 53 என்ற மதிப்புடன் இந்தியா 87வது இடத்தில் (115 நாடுகளில்) உள்ளது.
- இக்குறியீடானது உலகப் பொருளாதார மன்றத்தினால் அதன் “2021 ஆம் ஆண்டு திறம் வாய்ந்த ஆற்றல் மாற்றத்தினை மேம்படுத்துதல்” எனும் அறிக்கையில் வெளியிடப் படுகிறது.
- இக்குறியீட்டில் ஸ்வீடன், நார்வே மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் முதல் இடங்களில் உள்ளன.
- இந்த அறிக்கையானது Accenture நிறுவனத்துடன் இணைந்து உலகப் பொருளாதார மன்றத்தினால் தயாரிக்கப்படுகிறது.
- இந்த அறிக்கைகையின் 2021 ஆம் ஆண்டு பதிப்பானது திறம் வாய்ந்த ஆற்றல் மாற்ற அறிக்கையின் (ETI – Effective Energy Transition) 10 ஆம் ஆண்டு நிறைவினைக் குறிக்கிறது.

- ஆசியப் பகுதியில் மலேசியா முதலிடத்திலும் (13 நாடுகளில்) இந்தியா 9வது இடத்திலும் உள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## குறிப்பிட்ட அளவில் கவலை கொள்ள வைக்கும் நாடுகள் பட்டியலில் இந்தியா

- சர்வதேச மதச் சுதந்திரத்தைக் கண்காணிக்கும் அமெரிக்க அரசு நிறுவனமானது தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டும் இந்தியாவினைக் குறிப்பிட்ட அளவில் கவலை கொள்ள வைக்கும் நாடுகள் பட்டியலில் (Country of Particular Concern - CPC) சேர்க்கப் பரிந்துரை செய்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டு CPC பட்டியலில் சேர்க்கப்பட பரிந்துரைக்கப்பட்டுள்ள மற்ற புதிய நாடுகள் ரஷ்யா, சிரியா மற்றும் வியட்நாம் ஆகியவையாகும்.
- USCIRF (United States Commission on International Religious Freedom) அமைப்பினால் ஏற்கனவே CPC பட்டியலிலிருக்கும் நாடுகளுள் மறுபடியும் பட்டியலில் சேர்க்கப் பரிந்துரைக்கப்பட்ட நாடுகள் பர்மா, சீனா, எரித்ரியா, ஈரான், நைஜீரியா, வடகொரியா, பாகிஸ்தான், சவுதி அரேபியா, தஜிகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகியவை ஆகும்.
- 2019 ஆம் ஆண்டில் சிறப்பு கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட கியூபா மற்றும் நிகரகுவாவுடன் சேர்த்து ஆப்கானிஸ்தான், அல்ஜீரியா, அசர்பெய்ஜான், எகிப்து, இந்தோனேசியா, ஈராக், கஜகஸ்தான், மலேசியா, துருக்கி மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளும் “சிறப்பு கண்காணிப்புப் பட்டியலில்” சேர்க்கப்பட பரிந்துரைக்கப் பட்டுள்ளன.




## நிம்பஸ் திட்டம்

- இஸ்ரேலிய அரசானது தனது இராணுவ மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு மேகக் கணிமைச் சேவைகளை (Cloud Services) வழங்குவதற்கு வேண்டி கூகுள் மற்றும் அமேசான் ஆகிய வலைதள சேவை வழங்கும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து உள்ளது.

- "நிம்பஸ் திட்டம்" எனப் பெயரிடப்பட்ட இத்திட்டமானது நான்குக் கட்டங்களில் அமல்படுத்தப்பட உள்ளது.
- நிம்பஸ் திட்டமானது 1 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பில் அமல்படுத்தப்பட உள்ளது.
- இத்திட்டமானது இஸ்ரேலில் மேகக் கணிமைத் தளங்களை உருவாக்கும்.
- இத்தளங்கள் கடுமையான பாதுகாப்பு வழிகாட்டுதல்களின் கீழ் இஸ்ரேலிய எல்லைக்குள்ளேயேத் தகவல்களைப் பாதுகாத்து வைத்திருக்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பொட்டேமோபைலக்ஸ் கொரோனா வைரஸ்

- உயிரியல் வல்லுநரான ஹலீஸ் இப்ராஹிமி என்பவர், தான் புதிதாகக் கண்டறிந்தப் பூச்சிக்கு கொரோனா வைரஸ் நினைவாக ஒரு பெயர் சூட்டியுள்ளார்.
- இந்த பூச்சி இனங்கள் "Accursed Mountains" (சபிக்கப்பட்ட மலைகள்) பகுதிகளில் (கொசோவாவின் மேற்கத்திய ஜெஸ்கெத் இ நெமுனா தேசியப் பூங்கா) காணப் படுகின்றன.
- இவற்றிற்கு தற்போது "பொட்டேமோபைலக்ஸ் கொரோனா வைரஸ்" எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இப்பூச்சி இனங்கள் இந்த தேசியப் பூங்கா பகுதியைச் சேர்ந்த பூர்வீக இனங்களாகும்.
- இந்தப் புதிய பூச்சி இனங்கள் திறந்தவெளி மற்றும் கடல் மட்டத்திலிருந்து 2000 மீட்டர் வரையிலான உயர்மட்டப் பகுதிகளில் வாழும் சிறிய பூச்சிகளாகும்.
- கேடிஸ்ஃப்ளை இனங்கள் (Caddisfly species) பற்றிய அவரது ஆய்வின் போது நீர்மின் நிலையம் கட்டப்பட்டதனால் டெகானிட் நதியானது கடுமையாக மோசமடைந்து வருவதையும் அறிவியலாளர்கள் கண்டறிந்தனர்.
- அந்த நதியின் குறுக்கே நீர்மின் நிலையம் அமைப்பதால் ஏற்படும் விளைவானது, மனிதர்கள் மீது கொரோனா வைரஸ் ஏற்படுத்திய தாக்கத்திற்குச் சமமானதாகும்.
- எனவே, அங்கு கண்டறியப்பட்ட இப்புதிய இனத்திற்கு கொரோனா வைரசின் பெயர் சூட்டப் பட்டுள்ளது.

### *டெகனைட் நதி*

- இது வொயிட் டிரின் நதியின் கிளை ஆறு ஆகும்.
- வைசோகி டெகானியின் மடாலயம் டெகானைட் நதிக்கரையில் அமைந்துள்ளது.
- இது ஒரு யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளமாகும்.
- இந்நதியானது அட்ரியாட்டிக் கடலில் கலக்கிறது.


# முக்கிய தினங்கள்

## தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம்

- பஞ்சாயத்து ராஜ் அமைப்பானது உள்ளாட்சி அரசின் ஒரு பழமை வாய்ந்த அரசு முறையாகும்.
- 1992 ஆம் ஆண்டில் இந்தியப் பஞ்சாயத்து நிர்வாக முறையில் பஞ்சாயத்து ராஜ் சட்டம் (73வது திருத்தம்) இயற்றப்பட்டதன் மூலம் ஒரு பெரிய மாற்றம் கொண்டு வரப்

பட்டது.

- இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் ஏப்ரல் 24 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது.
- முதல் தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினமானது 2010 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.
- அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் ஏப்ரல் 24 ஆம் தேதி தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினமானது கொண்டாடப்படுகிறது.




# இதரச் செய்திகள்

## நோயெதிர்ப்புச் சக்தியிலிருந்துத் தப்பிக்கும் கொரோனாவின் புதிய வடிவம்

- நோயெதிர்ப்புச் சக்தியிலிருந்துத் தப்பிக்கும் கோவிட்-19 வைரசின் புதிய வடிவமானது மேற்கு வங்காளத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.
- இந்தப் புதிய SARS – COV2 என்ற வடிவமானது ஒரு நபர் இதற்கு முன்பு வைரசினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அந்த வைரசிற்கு எதிரான ஆன்டிபாடிகளைக் கொண்டே இருந்தாலும் அந்த நோயெதிர்ப்புச் சக்தியிலிருந்து விடுபட்டு அந்நபருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறப்பட்டுள்ளது.
- இந்தத் தன்மை மாறிய வைரஸ் ஆனது கோவிட்-19 வைரசின் இரட்டை மாறுபாடு வடிவத்தை ஒத்துள்ளது.
- இது இந்தியாவின் 18 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் குறிப்பாக மஹாராஷ்டிராவில் கண்டறியப்பட்டு உள்ளது.
- மகாராஷ்டிராவில் எடுக்கப்பட்ட 15-20% மாதிரிகளில் இவ்வடிவ வைரஸ் கண்டறியப் பட்டுள்ளது.
- B.1.618 எனப்படும் கொரோனா வைரசின் புதிய வடிவம் ஆனது நோயெதிர்ப்பு சக்தியிலிருந்துத் தப்பிக்கும் புதிய வடிவ கொரோனா வைரஸ் ஆகும்.
- இது E484K உள்ளிட்ட ஒரு மாறுபட்ட மரபணு வடிவ தொகுதியாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

- மேற்கு வங்காளத்தில் B.1.618 வகையின் விகிதம் கணிசமாக அதிகரித்து வருவதாக அறிவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★